## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகம் - 2018

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, நிறுவகத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவனத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தலைத் தவிர, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பெரிதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதப்படவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவகம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையில் அத்தகைய கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளதா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது நிறுவகத்தின் ஆளுனர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய அறிக்கையில் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்யப்படல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவகம் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நிமயங்களுடன் இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் பட்டப்பின்படிப்பு கல்விப் பிரிவுக்கு இணைவாக நடாத்தப்படும் எம்.டீ (ஆயர்வேத) (2016/2019) 3 ஆண்டுக் கற்கைநெறியினது கல்விசார் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின்போது அமுல்படுத்தப்படவில்லை. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 க்கமைய இதனால் உருவாகக்கூடிய எதிர்பாரா நிலைமை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இது தொடர்பாக குறிப்பாக எதுவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே, இந் நிலைமை உருவாகி உள்ளது. | நியமத்தின் பிரகாரம் எதிர்பாரா நிலைமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | சேர்ந்து நின்ற அடிப்படையில் கணக்கீட்டை மேற்கொள்வதில் நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 395,300 விடுதிக் கட்டண வருமானம் காசு அடிப்படையில் கணக்கிலிடப்பட்டமை தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 க்கமைய நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | விடுதி மாணாக்கரது வேறுபாடுகள் காரணமாக சேர்ந்து நின்ற அடிப்படை மற்றும் முற் பெறுவனவுகள் நிச்சயிக்கப்பட முடியாததால் காசு அடிப்படையில் கணக்கிலிடப்பட்டது. | சேர்ந்து நின்ற அடிப்படையில் கணக்கிலிடப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின்போது எம்.டீ. ஆயுர்வேத கற்கை நெறியை விட்டு விலகிய மாணாக்கர் ஒருவரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 211,111 வருமானத்தை கணக்கில் சீராக்கல் செய்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். குறித்த கற்கை நெறி தொடர்பாக நிச்சயமானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே, இந்நிலைமை உருவாக ஏதுவாகியது. | பெற வேண்டிய வருமானத்தைத் தவறின்றிக் கணக்கிலிட வேண்டும். |
| (ஆ) | எடுத்துச் செல்லும் நூலகப் புத்தகங்களை மீண்டும் ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு ரூபா 10,803 தண்டப் பணமாகப் பெறப்பட வேண்டியபோதும், அதனைப் பெற வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டவில்லை. | நூலகத்திற்குத் தகவல் கிடைக்காமையால் இந்நிலைமை உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பெற வேண்டிய வருமானத்தைத் தவறின்றிக் கணக்கிலிட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது நிதிசார் அனுசரணையுடன் பட்டப்பின் படிப்புப் பயிற்சி பெறுவதற்காக வெளிநாடு சென்ற விரிவுரையாளர் ஒருவரது வானூர்திக் கட்டணமாக 2012 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 79,000 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து 2018 வரை மீள நிரப்பப்படாதிருந்தது. | குறித்த தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவாறுள்ளது | பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டுப் பிரசுராலாயத்திலிருந்து பிரசுரங்களை கொள்வனவு செய்யும்போது, சேவையை பெறுவதற்கு முன்பே பணத்தைச் செலுத்துவதுடன், அவ்வாறாக 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,937,832 விடுவிக்கப்பட்டிருந்தது. இதில் 1 முதல் 5 ஆண்டுகள் பழமை வாய்ந்த மீதிகள் ரூபா 1,615,057 ஆகும். | வெளிநாட்டு சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்வதற்கு அச்சிடும் ஆண்டிற்கு முன்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், சஞ்சிகைகள் கொடுப்பனவு ஆண்டை அடுத்துவரும் ஆண்டில் பெறப்படாததுடன், பின்னர் வரும் ஆண்டுகளிலிலேயே பெறப்படுகின்றன. | பிரசுரங்களைக் கொள்வனவு செய்கையில் குறைந்தளவு காலத்தில் அவற்றைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரது கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் தர்ம சாஸ்திரக் குழுவிற்கு 2016 ஆம் ஆண்டளவில் சிகிச்சை முகாம் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு அதிகாரம் இல்லாதிருந்தது. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அதனோடிணைந்த நிறுவனம் ஒன்றினது சிகிச்சை முகாம் ஆராய்ச்சியை நடாத்துவதன் பொருட்டு அங்கீகாரத்தை வழங்கக் கூடிய தர்ம சாஸ்திரக் குழுவினது அங்கீகாரத்தைப் பெறலாம். எவ்வாறாயினும், அவ்வாறல்லாது சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் தர்ம | முகாமைத்துவ சபையினரால் நியமிக்கப்பட்ட குழுவினால் இது தொடர்பாக விசாரிக்கப்படுகின்றது. | சிகிச்சை முகாம் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தை வழங்கக்கூடிய தர்மசாஸ்திரக் குழுவினது அங்கீகாரம் பெறப்பட வேண்டுவதுடன், தொடர்புடைய தரப்பினர் தீர்மானங்களை மேற்கொள்வதில் பங்குபற்றுதலும் ஆகாது. |

சாஸ்திர குழுவினது அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்குவதன் மூலம் சிகிச்சை முகாம் ஆராய்ச்சிகளை 2016 திசெம்பர் மாதத்தின் போது மேற்கொண்டிருந்தது. இவ் ஆராய்ச்சியை மேற்கொண்ட 04 ஆராய்ச்சியாளர்களில் இருவர் சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் தர்ம சாஸ்திர தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளை வகிக்கும் காலப்பகுதியின்போது அவ்விருவரும் கலந்து கொண்ட ஆராய்ச்சிகளுக்கு தர்ம சாஸ்திர குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்ததுடன், அதில் ஒரு விரிவுரையாளர் மருந்து உற்பத்திக் கம்பனியின் மதியுரையாளராகவும் இருந்தார்.

### 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| நிதிப்பிரமாணம் 104 | சொத்துக்களை மீளப் பெறுமதியிடும் சந்தர்ப்பத்தில் ரூபா 744,947 கிரயமுடைய சொத்துக்கள் உள்ளனவா என்பது உறுதி செய்யப்படவில்லை. இது வெளிப்படுத்தப்பட்டபோதும் நிறுவகம் நிதிப் பிரமாணத்தின்படி நடடிவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. | பரிசீலிப்பதற்கு இல்லாதிருத்தல். | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| நிதிப்பிரமாணம் 371 | பெறப்பட்ட முற்பணம் தேவை நிறைவேறியவுடன் தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும், 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்தத் தொகையும் பயன்படுத்தப்படாது காலதாமதத்தின் பின் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | குறித்த பணிகள் பல்வேறு காரணங்களால் பிற்போடப்பட்டதால் மொத்த முற்பணமும் பயன்படுத்தப்படாது திருப்பிச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் தாமதமின்றி பணத்தைத் திருப்பிச் செலுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 757(2) | சொத்துச் சரி, பிழை பார்த்தல் அறிக்கையின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 44 கூறுகளைக் கொண்ட சொத்துக்கள் பொருட் பட்டோலைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிராததுடன், 96 கூறுகளைக் கொண்ட சொத்துக்கள் அத்தினத்தில் குறைவாக இருப்பதும் காணப்பட்டது. | பரிசீலிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 மற்றும் 4.2.6 ஆம் பிரிவுகள் | யுனானி, ஆயுர்வேத மற்றும் பட்டப்பின் படிப்புப் பிரிவுகளின் பிரிவு வாரியான செயலாற்றல் தொடர்பாக காலாண்டு, அரையாண்டு, வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் வரிசை அமைச்சுக்கும் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆயர்வேத மற்றும் யுனானி பிரிவுகளது 2018 ஆம் ஆண்டிற்கான அறிக்கை அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் குறித்த காலத்தில் அறிக்கைகளை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பட்டோலை | நிலையான சொத்துக்கள் தொடர்பான சுற்றறிக்கையில் எதிர்பார்க்கப்படும் அறிக்கை பேணப்படுவதற்கு சகல பிரயத்தனங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிலையான சொத்துப் பதிவேட்டில் திரண்ட தேய்மானத்தைக் காட்டும் விதத்தில் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டில் தேய்மானம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் உள்ள குறைபாடுகள் சம்பந்தமாக மென் அணியைக் கொள்வனவு செய்த நிறுவனத்துடன் கலந்துரையாடப்படுகின்றது. அதற்கமைய, இந்நிலைமையைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 2016/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | சுற்றறிக்கைப் பிரகாரம் 2018 பொருட் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், நிறுவகத்தின் 6 பிரிவுகளது குறித்த அவ்வறிக்கை 2019 மே 10 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் | எதிர்காலத்தில் தாமதத்தைக் குறைத்து குறித்த காலத்தில் சொத்துச் சரி, பிழை பார்த்தல் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 25,724,695 பற்றாக்குறை ஆகும். அதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 23,668,975 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 2,055,720 நலிவு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினது மீண்டு வரும் பெறுவனவு ரூபா 75,319,000 அதிகரித்தபோதும், பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 7,462,791 அதிகரித்தும் நிர்வாகச் செலவினமும் கல்விசார் சேவைச் செலவினமும் முறையே ரூபா 18,686,383 மற்றும் ரூபா 47,546,295 அதிகரித்தும் இருந்தமையே மேற்படி நிதிப் பெறுபேற்றுக் குறைவிற்கான பிரதான காரணங்கள் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 குறைவான நிதியப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொருட் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமையால் வழங்கப்பட்ட அரச மூலதன மானியத்தில் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்த தொகை ரூபா 7,788,661 ஆகும். | பயன்படுத்தப்படாத தொகையாகச் சுட்டிக் காட்டப்பட்ட தொகை பயன்படுத்தப்படாது போனமைக்கு கட்டளைகள் வழங்கப்பட்ட பொருட்கள் பெறப்படாததாலும் வழங்கிய ஒப்பந்தங்களது விலைப் பட்டியலுக்கான கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்பட்டமையுமே காரணமாகும். 2018.12.31 இல் உள்ளவாறான நானாவித கடன்பட்டோர் ரூபா 12,363,611 ஆகும். எவ்வாறாயினும், எதிர்காலத்தில் சகல பணமும் குறித்த ஆண்டின்போதே செலவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின்போது மூலதனச் சொத்துக்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் 09 செயற்திட்டங்களுக்கு ரூபா 16,910,425 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது மூலதன சொத்துக்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்தவதற்கும் ரூபா 15,208,945 செலவிடப்பட்டிருந்தது. அச்செலவில் 2017 ஆம் ஆண்டிற்குரிய செயற்திட்டச் | 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு வேலை முடிவடையாத ஒப்பந்தங்களது வேலை 2018 ஆம் ஆண்டில் முடிவடைந்ததையடுத்து குறித்த பணம் செலுத்தப்பட்டுள்ளது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செலவினம் ரூபா 9,471,101 ஆகும்.

### 3.3 பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பந்தியின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் குறைந்தது 3 ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளை, தமது பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் நிரல்படுத்த வேண்டுமாயினும், பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தை நிறுவகம் தயாரிக்கவில்லை. | 2019 தொடக்கம் 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பந்தியின் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படும் | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கெனத் தயாரித்த விரிவான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் நிறுவகத்தின் பொருட் கொள்வனவுக் காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருந்தபோதும், நிறுவகத்தின் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளைப் பரிசீலித்தபோது திட்டமிடப்பட்டவாறான காலப்பகுதியில் அவை மேற்கொள்ளப்படாமை புலனாகியது. | 2018 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியானது வேலை நிறுத்தம் மற்றும் மாணாக்கர் நடவடிக்கைகள் போன்ற இடையூறுகளால் ஓரளவு மாறுப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் குறித்த காலப் பகுதியில் மாற்றம் ஏற்படுவதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டிற்குரிய நிறைவு பெறாத பொருட் கொள்வனவுகள் திட்டத்தில் முடிவடையாத வேலையாக சுட்டிக் காட்டப்படாமையால் முடிவடையாத நிலைமை மற்றும் மீளாய்வாண்டிற்கான ஏற்பாடு செய்யப்பட்ட பொருட் கொள்வனவுகளது எதிர்பார்த்த இலக்கும் அடையப்பெற்ற முன்னேற்றமும் குறைவடைந்தமை | 2018 ஆம் ஆண்டு தொடக்கம் நிறைவடையாதிருந்த பொருட் கொள்வனவுகள் 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டத்தில் நிச்சயமற்றனவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் ஆண்டறிக்கையின் வரைவுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் வரைவு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டவாறுள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய நிறுவகத்தின் அமைப்பு, வியூகம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போதைய பதவியணி, வருடாந்தச் செயற்பாட்டுக்கான கட்டு நிதித் தேவைத் திட்டம், பாதீடு, பொருட் கொள்வனவுத் திட்டம், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்படவில்லை. | சரிவரத் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கையில் இலக்குகளையும் சுட்டுக்களையும் இனங்காணத் தவறியமையால் நிறுவகம் இலக்கையும் சுட்டுக்களையும் எய்தியமையை அளவிட முடியாதிருந்தது. | குறைபாடுகளைக் குறைத்தவாறு 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் | இலக்கை அடையப் பெற்றதை அளவிடும் சுட்டுக்களை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆயுர்வேத மற்றும் யுனானி கற்கை நெறிகளது கடந்த 6 கல்விசார் ஆண்டுகளுடன் தொடர்புடைய | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | கற்கை நெறிகளிலிருந்து நீங்குவது |

| | | | |
|---|---|---|---|
| | மாணாக்கர்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே 94 மற்றும் 39 மாணாக்கர்கள் கற்கை நெறியிலிருந்து விலகியிருந்தனர். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது முறையே 14 சதவீதம் மற்றம் 15 சதவீதம் எனும் சீரற்ற அதிகரிப்பாகும். | | தொடர்பாக நிரந்தர மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பரீட்சைக்குத் தோற்றிய மாணாக்கர்களில் பரீட்சையில் சித்தியடையாதவர்களது சதவீதம் மாணாக்கர்களது சிரேஷ்ட நிலைமையுடன் ஒப்பிடப்படுகையில் உயர்வடைந்திருந்தது. 2010/2011 முதல் 2016/2017 வரையான 7 கல்விசார் ஆண்டுகளுடன் தொடர்புடைய மாணாக்கர்களுக்கு மீளாய்வாண்டின்போது 25 பரீட்சைத் தொடர்கள் நடாத்தப்பட்டிருந்தன. அப்பரீட்சைக்குத் தோற்றிய மாணாக்கர்களில் ஆயுர்வேத மருத்துவப் பட்டப் படிப்பு மற்றும் யுனானி மருத்துவப் பட்டப் படிப்பு என்பவற்றில் சித்தியடையாதோர் முறையே 44 சதவீதமும் 35 சதவீதமும் ஆகும். | கற்கை நெறியில் உள்ளடங்கிய சில குறைபாடுகள், நிறுவகம் மற்றும் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் வளப் பற்றாக்குறை, செய்முறை நடவடிக்கைகளுக்கு மாணாக்கர் வருகை தருவது குறைவடைதல் மற்றும் மாணாக்கர்களது வெளி நடவடிக்கைகள் என்பன சிலவற்றிற்கு காரணமாக அமையக்கூடும். கற்கை நெறியில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்நிலைமையைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறுள்ளது. | பரீட்சைகளில் சித்தியடையாமை தொடர்பாக நிரந்தர மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | கடந்த 7 ஆண்டுகளின்போது நிறுவகத்தில் மாணாக்கரை ஆட்சேர்ப்பது தொடர்பாகப் பரிசீலிக்கையில் பல்கலைக்கழகத்தின் வளத்துக்கேற்ப ஆட்சேர்ப்பதற்கு வசதிகள் இருந்த மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள மாணாக்கரது எண்ணிக்கை 1,580 ஆகவுள்ளபோதும், இக்காலப்பகுதியின்போது 1,475 மாணாக்கர் மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். ஆட்சேர்ப்புக்குள்ளாகக் கூடிய மொத்த மாணாக்கரது எண்ணிக்கையில் இது 93.4 சதவீதமாகும். | மாணாக்கரை ஆட்சேர்ப்பதில் நிறுவகம் எதுவித குறைவையும் மேற்கொள்ளவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கும் பெயர்ப் பட்டியலின் பிரகாரம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பதிவு செய்யப்படாத பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதற்கேற்ப பதிவுகள் மேற்கொள்ளப்படும். இவ்விதமாக அநேக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில மாணாக்கர்கள் பதிவு செய்யப்படாமையால் இந்நிலைமை உருவாகி உள்ளது. அது நிறுவகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது ஆகும். | பல்கலைக்கழக வளம் உயர் அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 4.3 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக நிறுவகம் அறிந்திருந்தபோதும், அப்பணிகள் தொடர்பான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்விலக்கை அடைவதற்கான வழிவகைகளும் இலக்குகளும் அடையப்பெற்றதை அளவிடுவதற்கான சுட்டுக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | கணக்காய்வில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளை இனங்கண்டு நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்விலக்கை அடையும் வழிவகைகள் மற்றும் இலக்கை அளவிடும் சுட்டையும் இனங்காண்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுட்டுக்களை இனங்காண்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |